## சுருக்கம்

பணியமைப்பு – மதுரை மற்றும் தேனி மாவட்டம் – மேலூர், உசிலம்பட்டி, சின்னமனூர், போடி, தேனி, பெரியகுளம், கம்பம் ஆகிய நகராட்சிகளில் உள்ள பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத்திட்டத்தின்கீழ் (Reproductive and Child Health Project) அனுமதிக்கப்பட்ட மருத்துவ அலுவலர் பணியிடங்கள் மற்றும் தற்போது பணியாற்றும் 57 பணியாளர்களின் (திருமங்கலம் நகராட்சியின் ஒரு மருத்துவ அலுவலர் + 56 இதர பணியாளர்கள்) பணியிடங்களை காலமுறை ஊதியத்தின்கீழ் கொண்டு வருதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

அரசாணை (நிலை) எண்.190 நாள்:12.10.2009.

படிக்கப்பட்டது:

1) அரசாணை (பத்தாண்டு) எண்.1247, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 14.09.1998.
2) அரசாணை (நிலை) எண்.139, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 31.03.2009.
3) நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.8414/1998/எச்3, நாள் 08.09.2009.

----

**ஆணை:–**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் நகரக மற்றும் ஊரக பகுதிகளில் ரூ.23.14 கோடி செலவில் 1997–98 முதல் 2001–2002 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு உலக வங்கி நிதியுதவியுடன் பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தினை (Reproductive and Child Health Project) செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டத்தில் மேலூர், திருமங்கலம், உசிலம்பட்டி, சின்னமனூர் ஆகிய நகராட்சிகளிலும், தேனி மாவட்டத்தில் போடிநாயக்கனூர், தேனி அல்லிநகரம், பெரியகுளம், கம்பம் ஆகிய நகராட்சிகளிலும் நகரக சுகாதார மையங்கள் நிறுவப்பட்டன.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அசராணையில் இத்திட்டத்திற்காக முதலில் மருத்துவ அலுவலர் உள்பட 12 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டன என்றும், எனினும் தற்போது இத்திட்டத்தின்கீழ் (Reproductive and Child Health Project) மேலூர், திருமங்கலம், உசிலம்பட்டி, சின்னமனூர், போடி, தேனி, பெரியகுளம், கம்பம் ஆகிய நகராட்சிகளுக்கு அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள், தற்போது பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தேவைப்படும் பணியாளர்களின் விவரம் கீழ்கண்டவாறு உள்ளது என மேலே மூன்றாதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்:-

## பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத்திட்டம்

| வ. எண். | நகராட்சியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | | | | | தற்போது பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை | | | | | உண்மையில் தேவைப்படும் பணியாளர்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | | | | (4) | | | | | (5) | | | | |
| | | மருத்துவ அலுவலர் | செவிலியர் | கணினி (ம) எழுத்தர் | எ. என். எம். | சுகாதாரப் பணியாளர் | மருத்துவ அலுவலர் | செவிலியர் | கணினி (ம) எழுத்தர் | எ. என். எம். | சுகாதாரப் பணியாளர் | மருத்துவ அலுவலர் | செவிலியர் | கணினி (ம) எழுத்தர் | எ. என். எம். | சுகாதாரப் பணியாளர் |
| 1. | சின்னமனூர் | 1 | 3 | 1 | 4 | 3 | 0 | 2 | 1 | 2 | 3 | 1 | 2 | 1 | 3 | 3 |
| 2. | கம்பம் | 1 | 3 | 1 | 4 | 3 | 0 | 2 | 0 | 3 | 3 | 1 | 1 | 1 | 1 | 2 |
| 3. | போடி நாயக்கனூர் | 1 | 3 | 1 | 4 | 3 | 0 | 0 | 1 | 4 | 3 | 1 | 3 | 1 | 4 | 3 |
| 4. | பெரியகுளம் | 1 | 3 | 1 | 4 | 3 | 0 | 1 | 1 | 2 | 0 | 1 | 0 | 0 | 2 | 0 |
| 5. | தேனி | 1 | 3 | 1 | 4 | 3 | 0 | 0 | 0 | 1 | 3 | 0 | 2 | 0 | 3 | 3 |
| 6. | உசிலம்பட்டி | 1 | 3 | 1 | 4 | 3 | 0 | 3 | 0 | 3 | 3 | 1 | 3 | 1 | 4 | 3 |
| 7. | மேலூர் | 1 | 3 | 1 | 4 | 3 | 0 | 2 | 1 | 0 | 3 | 1 | 1 | 0 | 4 | 0 |
| 8. | திருமங்கலம் | 1 | 3 | 1 | 4 | 3 | 1 | 1 | 1 | 4 | 3 | 0 | 1 | 1 | 2 | 3 |
| | மொத்தம் | 8 | 24 | 8 | 32 | 24 | 1 | 11 | 5 | 19 | 21 | 6 | 13 | 5 | 23 | 17 |

மேலும், இத்திட்டத்திற்கான பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்டனர் என்றும், இவர்களுக்கான ஊதியம் மே 2000 முதல் மார்ச் 2004 வரை இத்திட்டத்தின் நிதியிலிருந்தும், ஏப்ரல் 2004–லிருந்து நகராட்சி பொது நிதியிலிருந்தும் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது என்றும், இத்திட்டப் பணியாளர்கள் கீழ்காணும் பணிகளை கவனித்து வருகிறார்கள் என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

அ) குழந்தைகளுக்கு தடுப்பு ஊசி போடுதல்;

ஆ) குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமலாக்குதல்;

இ) உள்நோயாளிகள், புற நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தல்;

ஈ) மருந்தகத்தில் உள்ள பதிவேடுகளை பராமரித்தல், பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் பராமரித்தல்; மற்றும்

உ) மத்திய மற்றும் மாநில அரசின் பல்வேறு சுகாதார திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

3. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில், இத்திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் தேவையை கருத்தில் கொண்டு, மேலூர், திருமங்கலம், உசிலம்பட்டி, சின்னமனூர், போடி, தேனி, பெரியகுளம், கம்பம் ஆகிய நகராட்சிகளில் உள்ள சுகாதார மையங்கள் மூலம் பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தினை (Reproductive and Child Health Project) தொடர்ந்து செயல்படுத்துவது அவசியம் என கருதியும், அதில் பணியாற்றும் பணியாளர்களின் தேவையினை அறிந்தும், அம்மையங்களில் அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள், ஏற்கனவே பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தேவைப்படும் பணியாளர்களை காலமுறை ஊதியத்தில் நிர்ணயம் செய்து ஆணை

வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் அனுமதிக்கப்பட்ட பணியாளர்களுக்கான ஆண்டு செலவினம் ரூ,1,23,48,864/- என்றும் தற்போதுள்ள பணியாளர்களுக்கான ஆண்டு செலவினம் ரூ.63,62,616/– என்றும் தேவைப்படும் பணியாளர்களின் ஆண்டு செலவினம் ரூ.83,23,272/– என்றும் இச்செலவினம் சம்பந்தப்பட்ட நகராட்சிகளின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

4. இந்நிலையில் இக்கருத்துரு குறித்து அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், திருமங்கலம் நகராட்சியை தவிர மேலூர், உசிலம்பட்டி, சின்னமனூர், போடி, தேனி, பெரியகுளம், கம்பம் ஆகிய 7 நகராட்சிகளில் மருத்துவ அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளதால், பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தினை (Reproductive and Child Health Project) செயல்படுத்துவதற்கு ஏதுவாக காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பணியிடங்கள் ஏழு நகராட்சிகளுக்கும் அவசியமாவதால் அப்பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படவேண்டும் என கருதி, அந்நகராட்சிகளுக்கு தேவைப்படும் 7 மருத்துவ அலுவலர்களுக்கும் மற்றும் தற்போது பணியிலிருக்கும் 57 பணியாளர்களுக்கும் (திருமங்கலம் நகராட்சியின் ஒரு மருத்துவ அலுவலர் + 56 இதர பணியாளர்கள்) காலமுறை ஊதியம் வழங்கலாம் என்றும், இதற்கான செலவினத்தை சம்பந்தப்பட்ட நகராட்சிகளின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என்றும் முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. மேற்குறிப்பிடப்பட்ட பணியாளர்களுக்கு ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து காலமுறை ஊதியம் வழங்கப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 006.
நகராட்சி ஆணையாளர், திருமங்கலம் / மேலூர் / உசிலம்பட்டி / சின்னமனூர்/ போடி நாயக்கனூர் / தேனி அல்லி நகரம் / பெரியகுளம் நகராட்சி.
திட்ட இயக்குநர், பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் (Reproductive and Child Health Project), சென்னை – 600 006.

<u>நகல்:–</u>
சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை, சென்னை – 600 009.
நிதித் துறை, சென்னை – 600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலர் அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு2) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.